செ.வெ.எண்:16 நாள்:04.04.2020

**தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பழைய பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காய்கறி மார்க்கெட் நுழைவு பகுதியில் கிருமி நாசினி ஒழிப்பு சுரங்க பாதையினை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் திறந்து வைத்தார்.**

---

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பழைய பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக காய்கறி மார்க்கெட் நுழைவு பகுதியில் கிருமி நாசினி ஒழிப்பு சுரங்க பாதை திறந்து வைக்கும் நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.04.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்து கொண்டு, கிருமி நாசினி ஒழிப்பு சுரங்க பாதையினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாநராட்சி ஆணையர் திரு.வி.பி.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கொரானோ வைரஸை பரவுதலை தடுப்பதற்கா, உலகளாவிய மக்கள் நலனை காப்பதற்காக உலக நாடுகள் எல்லாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நமது நாட்டிலும், மக்கள் சுய ஊரடங்கு உத்தரவினை 21 நாட்கள், ஏப்ரல் 14ம் தேதி வரை இந்திய முழுவதும் கடைபிடிக்க அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொரானோ வைரஸ் பரவுதலை தடுக்க முடியும். தமிழகத்தை பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தினந்தோறும் தலைமைச்செயலகத்தில் இருந்து , அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் உயர் அலுவலர்களுடன் கானொளிகாட்சி மூலம் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தி, ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

தமிழகத்திலேயே மக்கள் சுய ஊரடங்கை கடைபிடிக்கின்ற நேரத்தில், மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஏப்ரல் 2ம் தேதி முதல் கொரோனா வைரஸ் நிவாரணத் தொகை ரூ.1000/-மும், ஏப்ரல் மாதத்திற்கான ரேசன் பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வெளி மாநிலத்தை சார்ந்த நபர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினர் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், தங்குவதற்கான இடம் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவு கிடைப்பதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் சுமார் 5,000ம் வெளி மாநிலத்தை சார்ந்த நபர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு தேவையான உணவு வசதிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து பகுதிகளில் பொது மக்கள் சுய ஊரடங்கு உத்தரவினை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்கு தேவையான காய்கறிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் தூத்துக்குடி மற்றும் கோவில்பட்டியில் நடமாடும் காய்கறி அங்காடி வாகனம் மற்றும் பயன்பாட்டில்லாத பேரூந்து நிலையங்கள், பள்ளி விளையாட்டு மைதானம் உள்ளிட்ட இடங்களில் தற்காலிகமாக காய்கறி சந்தைகள் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு தேவையான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், நடமாடும் காய்கறி அங்காடி வாகனத்தின் மூலம் பொது மக்களுக்கு தேவையான காய்கறிகள் அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு தன்னார்வலர்கள் மூலம் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வருகைத்தந்த 2,100 நபர்கள் தணிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், நமது மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட 9 நபர்களை தொடா சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில், கொரோனா வைரஸ் பரிசோதனை செய்வது தொடர்பாக ஆய்வகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கான மருத்துவ உபகரணங்கள் டெல்லில் இருந்து வந்து கொண்டிருக்கிறது. சில தினங்களில் திறக்கப்படும் சுய ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ள போது பொது மக்களுக்கு தேவையான பொருட்கள் சரியான முறையில் விற்பனை செய்ய வேண்டும் என்று ஏற்கனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருந்தார்கள். நமது மாவட்டத்திலும், கூடுதல் விலையில் காய்கறிகள் விற்பனை செய்தால் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்கனவே அறிக்கை வெளியிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, கோவில்பட்டி, விளாத்திக்குளம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுமார் 500 தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி மாநகராட்சி, 2 நகராட்சிகள், 19 பேரூராட்சிகள் மற்றும் 403 ஊராட்சிகளில் தினந்தோறும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கடைகோடியில் உள்ள மக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு செய்திகளை வெளியிட்டு, ஒய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கும் பத்திரிக்கையாளரின் நலன் கருதி அரசால் ரூ.3,000/-ம் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். நமது மாவட்டத்தை சார்ந்த பத்திரிக்கையாளர்களுக்கும் ஊக்கத்தொகை கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்டத்தை அடுத்து, இன்று நமது மாவட்டத்தில் கிருமி நாசினி ஒழிப்பு சுரங்கப்பாதை, தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள தற்காலிக காய்கறி மார்க்கெட் நுழைவு வாயில் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் சுரங்கப்பாதை வழியாள உள்ளே சென்று வரும் போது அவர்களது தலை முதல் கால் வரை முழுவதுமாக கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசு மக்களை நலன் காக்க இது போன்று பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கொரோனாவை ஒழிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் திரு.மோகன், மாநகராட்சி செயற்பொறியாளர் திரு.பார்த்தீபன், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திரு.சரவணன், மாநகராட்சி சுகாதார அலுவலர் மரு.அருண்குமார், உதவி பொறியாளர்கள் திரு.பிரின்ஸ், திரு.ராமசந்திரன், இந்திய தொழில் கூட்டமைப்பு துணை தலைவர் திரு.மைக்கேல் மோத்தா, யங் இந்தியன்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு.தனுஷ் மதன், பயிற்சியாளர் திரு.பொன்னு குமரன், சுகாதார ஆய்வாளர் திரு.ஸ்டாலின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.